1986 நவம்பர் 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி தாம் பரத்தைப் பற்றியது. தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு சென்டராக கேட்டுக்கொண்டு இருப்பார்கள் என்றால்—தாம் ப்ரத்தைப்பற்றி வேண்டுமானால் கேளுங்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றி கேட்க ஆரம்பித்தால் அமைச்சர் எப்படி பதில் சொல்ல முடியும்?

வினா எண்கள் 131 முதல் 136 முடிய மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

கோவில்களில் வழிப்பாட்டுக்கு கட்டணம்.

137—(*வினா எண். 3024)—திரு. குமரி அனந்தன் : மாண்பு மிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில்களில் வழிபாட்டுக்கென்று கட்டணம் வசூலிப்பதை நிறுத்திவிடும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்கள் எதிலும் பொது வழியாகச் சென்று வழிபட கட்டணம் வசூலிக்கப்பட வில்லை. பிரத்தியேக அல்லது சிறப்பு வழியில் சென்று கோயி லில் வழிபடுவதற்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதை நிறுத்தும் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் சன்னிதானத்தின் முன்னால் உயர்வு தாழ்வு கற்பிக்கக் கூடாது என்கின்ற அடிப்படையிலும் ஆண்டவன் முன்னால் அனைவரும் சமம் என்ற வகையிலும் கட்டணமின்றி அனைவரும் போவதற்கு அந்த 'க்யூ' என்று சொல்கிறோமே அந்த வகையிலே போவதற்கு மட்டுமே ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்கள் திறந் திருக்கும் எல்லா நேரங்களிலும் தர்மதரிசனம் உண்டு; ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு செய்யப்படவில்லை.

திரு. குமரி அனந்தன் : துணைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே கட்டணங்களே இல்லாமல் எல்லோரும் ஒரே நேரத்தில் போய் வரிசையாக நின்று வழிபடுகிற வாய்ப்பைத் தமிழக அரசு நிலை நிறுத்தினால் மகிழ்ச்சி அடைவேன். அதைப் போல் வருகின்றவர்கள் அத்தனை பேரும் புரிந்து கொள்கின்ற அளவுக்குத் தமிழிலே வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழிலே வழிபாடு செய்ய வேண்டுமென்றால் அர்ச்சகர்கள் நிச்சயமாகத் தமிழிலே வழிபாடு செய்வதற்கு உதவுவார்கள்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் சன்னிதானத்திற்குச் செல்வதற்குக் கட்டணம் வசூலிப்பதையே மாண்புமிகு உறுப்பினரும் மற்றவர்களும் எதிர்க்கும்போது, திருவண்ணாமலை நகராட்சி, திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திற்குச் செல்பவர்கள் தனியாக ஒரு வரியைக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதாக அறிகிறேன். ஜெசியா வரி என்று முகமதியர் காலத்திலே உள்ளதைப்போன்று அவரவர்கள் பகுதியிலே வரி வசூலிக்க ஆரம்பித்தால் அரசின் நிலை என்ன ஆகும், அரசின் கொள்கை என்ன ஆகும்? ஆகவே, அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வேண்டும்.

திரு. வை. பாலசுந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி கோயில்களில் சில குறிப்பிட்ட திருவிழாக்களின் பொழுது விசேஷ பிரார்த்தனை செய்ய வரும் மக்களிடமிருந்து திருவண்ணாமலை நகராட்சி போன்ற சில உள்ளாட்சி அமைப்புகள் கட்டணம் வசூலிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று மக்களின் சார்பாக அறநிலையத்துறை உள்ளாட்சித் துறையை வலியுறுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியாக வினா போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்.

*138—(*வினா எண். 4856)—திரு. மு. இராசாங்கம் :* மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை விவசாயிகளுக்கு எந்த அடிப்படையில் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது?

(ஆ) அதே அடிப்படையில் குத்தகை விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் உண்டா ?